புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

எண்: 020616/போ.து/டி.பி-4/2016 தேதி : 22/07/2016

## செய்திக் குறிப்பு

### தவறாக வாகனம் ஓட்டுவோரிடம் வசூலிக்கப்படும் அபராதத் தொகை சாலை பாதுகாப்பினை மேம்படுத்த பயன்படும்

முறையற்ற வகையில் மோட்டார் வாகனம் இயக்குவதால் அனுதினமும் ஏற்படும் விபத்துகள் அதிகரித்துள்ளன. கடந்த 2015-16 நிதியாண்டில் மட்டும் புதுவையில் 1579 சாலை விபத்துகள் நடந்துள்ளன. அவற்றில் 207 பேர் உயிரிழந்துள்ளனர்.

தொடரும் சாலை விபத்தினை குறைக்கும் வகையில் போக்குவரத்து வாகனங்களுக்கு மட்டுமே உடனடி அபராதம் என்பதை மாற்றி தனியார் வாகனங்களில் பயணிப்போருக்கும் அபராதம் விதிக்கும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டது. மேலும் அவ்வாறு வசூல் செய்யப்படும் அபராதத் தொகையிலிருந்து சாலை பாதுகாப்பினை உறுதி செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரசாணை வெளியிடப்பட்டது கடந்த 20.08.2015ல் வெளியான அரசாணைப்படி இதுவரை சுமார் ரூ.84 லட்சங்கள் சாலை பாதுகாப்பு நிதியத்தில் சேர்ந்துள்ளது.

புதுச்சேரி போக்குவரத்துச் செயலக 20.08.2015 தேதியிட்ட குறிப்பாணை எண் 17ன்படி மோட்டார் வாகன சட்ட /விதி மீறலுக்கான நிர்ணயிக்கப்பட்டுள்ள அபராதத் தொகை விபரம் வருமாறு:

இரு சக்கர வாகனத்தில் இருவருக்கு மேல் பயணித்தல், தலைக்கவசம் அணியாமல் இரு சக்கர வாகனத்தை ஓட்டுதல், வாகனச் சோதனையின் பொது ஓட்டுநர் உரிமம், நடத்துனர் உரிமம், வாகனப் பதிவுச் சான்று, பர்மிட், தகுதிச் சான்று மற்றும் காப்புரிதிச் சான்று ஆகியனவற்றை காண்பிக்காதவர்கள், ஒரு மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்கு நிரந்தரமாக எடுத்துச் செல்லப்பட்ட வாகனங்கள் 12 மாத காலத்திற்குள் புதிய மாநிலத்தில் மறுபதிவு செய்யாமை, தகவல் தெரிவிக்காதோர், கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய போக்குவரத்து சமிஞ்சைகளை மீறுவது, மற்றும் போக்குவரத்து சமிஞ்சைகளை மாற்றுவது, பொது இடங்களில் ஆபத்தான நிலையில் வாகனங்களை நிறுத்துவது. மேற்கண்டவைபோக மோட்டார் வாகனச் சட்ட/விதிகளில்,குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்கான அபராதத் தொகை நிர்ணயிக்கப்படாத குற்றம் புரிவோர், ஆளில்லா இரயில்வே லெவல் கிராஸங்கனை கடந்து செல்வது போன்ற குற்றங்கள் முதல் குற்றத்திற்கு ரூ.100/-ம் இரண்டாம் மற்றும் அடுத்து ஒவ்வொரு முறைக்கும், குற்றத்திற்கு ரூ.300/- அபராதம் ஆகும்.

- உரிய அனுமதிச்சீட்டு இல்லாமல் பேருந்தில் பயணித்தல், வாகன ஆய்வு அலுவலரின் உத்தரவுக்கு கீழ்படியாமை, மற்றும் அவரை பணிசெய்ய விடாமல் தடங்கல் செய்வது, ஓட்டுனர் உரிமம் தொடர்பான குற்றங்கள், அனுமதியின்றி பந்தயம் (ரேஸ்) மற்றும் அதவேக ஒட்டம் செய்வது, அனுமதியின்றி வாகனத்தில் மாற்றம் செய்வது போன்ற குற்றங்களுக்கு ஒவ்வொரு முறையும் ரூ.500/- அபராதம்.

- ஒரு நபரை மிக அதிக வேகத்தில் வாகனத்தை ஓட்ட அனுமதித்தால் அக்குற்றத்திற்கு முதல் முறை ரூ.300/-, அடுத்து ஒவ்வொரு முறைக்கும் ரூ.500/- அபாயகரமாக வாகனத்தை ஓட்டும் குற்றத்திற்கு முதன்முறை ரூ.1000/- அடுத்து ஒவ்வொருமுறைக்கும் ரூ.2000/- அபராதம் விதிக்கப்படும். உடல் மற்றும் மன ரீதியாக தகுதியில்லாத போது வாகனத்தை ஓடடினால் முதன்முறை ரூ.200/- அடுத்து ஒவ்வொரு முறைக்கும் ரூ.500/-.

- வாகனப்பதிவுச்சான்று இல்லாமல் வாகனத்தை உபயோகப்படுத்தினால் முதன்முறை ரூ.2,500/- அடுத்து ஒவ்வொரு முறைக்கும் ரூ.5,000/- அபராதம் விதிக்கப்படும். ஒரு வாகனத்தை பர்மிட் இல்லாமல் போக்குவரத்து வாகனமாக ஓட்டுவது மற்றும் பர்மிட் விதிகளுக்கு முறணாக வாகனம் ஓட்டுவது ஆகிய குற்றங்களுக்கு இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு முதல் முறையாக ரூ.2,000/- அடுத்து ஒவ்வொரு முறைக்கும் ரூ.5,000/-, இலகு ரக வாகனங்களுக்கு முதல் முறையாக ரூ.3,000/- அடுத்து ஒவ்வொரு முறைக்கும் ரூ.6,000/- மிதரக வாகனங்களுக்கு முதல் முறையாக ரூ.4,000/- அடுத்து ஒவவொருமுறைக்கும் ரூ.8,000/-, கனரகவாகனங்களுக்கு முதல் முறையாக ரூ.5,000/- அடுத்து ஒவ்வொருமுறைக்கும் ரூ.10,000/- அபராதம் விதிக்கப்படும்.

- அனுமதிக்கப்பட்ட எடைக்கு அதிகமாக பாரம் ஏற்றும் வாகனங்களுக்கு ரூ.2000/- அபராதத்துடன் ஒவ்வொரு டன் அதிகபட்ச எடைக்கும் ரூ.1000/- கூடுதலாகவும் அந்த அதிகப்படி எடையை இறக்குவதற்கான செலவுத் தொகையுடன் வசூலிக்கப்படும். வாகன ஆய்வின் போது வாகனத்தை நிறுத்த மறுப்பது, அதனை எடையிட அனுமதிக்காதது மற்றும் அதிகபடி பாரத்தை இறக்க மறுப்பது ஆகிய குற்றங்களுக்கு ரூ.3,000/- அபராதம் விதிக்கப்படும். காப்பீடு செய்யாத வாகனங்களை ஓட்டினால் ரூ.1,000/-.

- சேவை செய்ய மறுக்கும் இருச்சக்கர/மூன்று சக்கர ஒப்பந்த ஊர்தி பர்மிட்தாரர்/ஓட்டுநர் ஒவ்வொரு முறைக்கும் ரூ.50/-ம், மற்ற போக்குவரத்து ஒப்பந்த ஊர்தி பர்மிட்தாரர்/ஓட்டுநர் ஒவ்வொரு முறைக்கும் ரூ.200/- ம் அபராதம் செலுத்த வேண்டும்.

- பேருந்து ஓட்டுநரின் அருகில் பயணிகளை நிற்பது அல்லது உட்காருவது சீட் பெல்ட் அணியாமல் வாகனம் ஓட்டுவது, அனுமதிக்கப்ப்டட கட்டணத்திற்கு அதிக கட்டணம் கோருவது மற்றும் வாகனத்தை சேதப்படுத்துவது ஆகிய குற்றங்களுக்கு அபராதத் தொகை ரூ.100/- ஆகும் .

மேற்கண்ட அபராதத்தொகை மற்றும் சாலைப் பாதுகாப்பு நிதியம் குறித்த அரசாணையினை போக்குவரத்துத் துறையின் வலைதளம் www.transport.puducherry.gov.in பதிவிரக்கம் செய்து கொள்ளலாம். அனைத்து வாகன உரிமையாளர்களும் மோட்டார் வாகன சட்ட/விதிகளை மதித்து மேற்படி அபராதத்தை தவிர்க்குமாறு கேட்டுககொள்ளப்படுகிறார்கள்.

22.7.2016

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்
புதுச்சேரி

GOVT. OF PUDUCHERRY